COVID - 19 PASEP - II

கொவிட் - 19 கால மாற்று உபாயக்கல்வி நிகழ்ச்சித்திட்டம்-II

வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை

க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான

ஆய்ந்தறிகை மதிப்பீடு – I 2020

தரம் - 11 **பாடம்: சைவநெறி** **நேரம் : 3 மணித்தியாலம்**

பகுதி - I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **பின்வரும் வினாக்களின் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

1. அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளில் நின்று ஆன்மாக்களுக்கு அருள் செய்பவர்,
   (1) விநாயகர் (2) சிவபெருமான் (3) முருகன் (4) விஸ்ணு

2. உள் பொருள் ஒன்றே அறிந்தவர்கள் அதனைப் பலவாறு கூறுவர் எனக்கூறும் நூல்,
   (1) வேதம் (2) புராணம் (3) ஆகமம் (4) இதிகாசம்

3. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை எனக் கூறியவர்,
   (1) அருணகிரிநாதர் (2) திருவள்ளுவர் (3) மாணிக்கவாசகர் (4) சம்பந்தர்

4. நவீன யுகத்து அரிச்சந்திரன் எனப் போற்றப்பட்டவர்,
   (1) ஆறுமுகநாவலர் (2) மகாத்மாகாந்தி (3) ஞானப்பிரகாசர் (4) விவேகானந்தர்

5. எமது பொறிகள் வாயிலாக பெறும் அறிவு,
   (1) பிரத்தியட்சம் (2) அனுமானம் (3) ஆகம உரை (4) ஆப்த வாக்கியம்

6. பஞ்சாங்கம் குறிப்பிடும் முதலாவதும் இறுதியுமான நட்சத்திரங்கள்,
   (1) அச்சுவினி புரட்டாதி (2) அச்சுவினி - ரேவதி
   (3) பரணி – ரேவதி (4) கார்த்திகை – புரட்டாதி

7. திருமணக் கிரியைகளில் "இரட்ஷாபந்தனம்" எனப்படுவது,
   (1) மோதிரம் எடுத்தல் (2) பிதிர் ஆசிர்வாதம்
   (3) காப்புக் கட்டுதல் (4) அம்மி மதித்தல் ஆகும்.

8. இறந்தவரின் பூதவுடல் தகனம் செய்த இடத்தில் சாம்பலை முறைப்படி புண்ணிய நீர் நிலைகளில் கரைத்துவிடும் கிரியை,
   (1) ஏகோதிட்டம் (2) மகாளயம் (3) அஸ்திசஞ்சயனம் (4) சமண்டி கரணம்

9. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" எனக் குறிப்பிட்டவர்,
   (1) திருமூலர் (2) கபிலர் (3) திருவள்ளுவர் (4) சேந்தனார்

www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

10. வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படும் தினம்,
(1) ஆவணி மாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக் கிழமை
(2) மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரம்
(3) கார்த்திகை மாதத் தேய்பிறைச் சனிக்கிழமை பிரதமை
(4) ஐப்பசி மாத வளர்பிறைப் பிரதமை

11. குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் எனும் தேவாரத்தில் குறிப்பிடப் படும் சிவ வடிவம்,
(1) நடராஜ வடிவம் (2) சோமாஸ்கந்த வடிவம்
(3) தட்சணாமூர்த்தி வடிவம் (4) அர்த்தநாரீஸ்வரர் வடிவம்

12. அருணந்தி சிவாச்சாரியார் இயற்றிய நூல்,
(1) திருவருட்பயன் (2) உண்மை விளக்கம்
(3) சிவஞான சித்தியார் (4) சிவஞானபோதம்

13. தென்னவன் பிரமராயன் என்னும் பட்டம் பெற்றவர்,
(1) திருஞானசம்பந்தர் (2) மாணிக்கவாசகம்
(3) திருநாவுக்கரசு நாயனார் (4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. திருப்புகழைப் பாடியவர்,
(1) சேக்கிழார் (2) அருணகிரிநாதர் (3) திருப்புகழ் (4) தாயுமானவர்

15. அட்டாங்க யோகங்களுள் தவம், தூய்மை, தத்துவ நூல்களை கற்று விளக்குதல்,
(1) இயமம் (2) நியமம் (3) ஆசனம் (4) தாரணை

16. மனம், வாக்கு, காயம் என்பவற்றை குறிக்கும் சொல்,
(1) முப்பொருள் (2) மும்மலம் (3) முத்தொழில் (4) திரிகரணம்

17. விபுலானந்தர் அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக உருவாக்கிய திட்டம்,
(1) அறக்கொடைத் திட்டம் (2) பாடசாலைகள்
(3) நிவாரணப் பணிகள் (4) தரும பரிபாலனம்

18. சுவேதனப் பெருமாளுக்கு மெய்ஞானத்தை உபதேசித்தவர்,
(1) அச்சுதகளப்பாளர் (2) சனாந்தனர்
(3) பரஞ்சோதி முனிவர் (4) திருஞானசம்பந்தர்

19. பன்னிரு திருமுறைகளுள் சுந்தரருடைய பதிகங்களை உள்ளடக்கிய திருமுறை,
(1) எட்டாந் திருமுறை (2) ஏழாம் திருமுறை
(3) ஏழாம், எட்டாந் திருமுறை (4) நான்காம் திருமுறை

20. கூன் பாண்டியனின் முதல் மந்திரியாக இருந்தவர்.
(1) சம்பந்தர் (2) சமணகுரு (3) குலச்சிறையார் (4) சிவபாதவிருதையர்

21. திருத்தொண்டர் தொகையைப் பாடியவர்,
(1) சேக்கிழார் (2) சுந்தரர் (3) அப்பர் (4) சம்பந்தர்

www.lkedu.lk

22. மனிதப் பிறவியின் வாழ்க்கையை நிர்ணயிப்பவர்,
(1) சனிபகவான் (2) பிள்ளையார் (3) ஆஞ்சநேயர் (4) காலதேவன்

23. விருந்தோம்பல் மூலம் பேணப்படும் பண்பு,
(1) நலிந்தோரைப் பேணுதல் (2) வருமானம் கிடைத்தல்
(3) நற்பெயர் கிடைக்கும் (4) மீண்டும் உதவி செய்வார்கள்

24. ஈழத்து சிதம்பரம் என போற்றப்படும் திருத்தலம்,
(1) திருக்கேதீஸ்வரம் (2) திருக்கோணேஸ்வரம்
(3) காரைநகர் சிவன் கோவில் (4) முன்னேஸ்வரம்

25. சைவ உலகில் முதற் பஞ்சாங்கத்தைக் கணித்தவர் என சான்றோர்களால் மதிக்கப்படுபவர்,
(1) வான்மீகி (2) ஆரியப்பட்டர் (3) திருவள்ளுவர் (4) திருநந்தி தேவர்

26. ஈதல் அறம் எனக் குறிப்பிட்டவர்,
(1) வள்ளுவர் (2) கம்பர் (3) ஔவையார் (4) திருமூலர்

27. உடலில் உயிர் இருக்கும்போது ஆற்றப்படும் சடங்குகள்,
(1) அபரக் கிரியை எனப்படும். (2) பூர்வ கிரியைகள் எனப்படும்.
(3) நித்திய கிரியைகள் எனப்படும் (4) காமிய கிரியைகள் எனப்படும்.

28. சைவர்கள் உணவு உண்பதற்கு முன்னர் ஓதவேண்டிய தேவாரம்,
(1) நிலைபெறுமா றெண்ணுதியேல் (2) காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
(3) அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் (4) சொற்றுணை வேதியன்

29. காலத்தின் சமயத் தேவையை உணர்ந்து பிள்ளையார் கதை என்னும் கதையை எழுதியவர்,
(1) சகவீரர் (2) வரத பண்டிதர் (3) திருமூலர் (4) சேக்கிழார்

30. ஆலயங்கள் இல்லாத இடத்தில் ஆலயத்தைப் புதிதாக அமைத்து அங்கு இறைவனை பிரதிட்டை செய்தல்,
(1) ஆவர்த்தனம் (2) அநாவர்த்தம் (3) புனராவர்த்தனம் (4) அந்தர்தம்

31. திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தை, தனது கழுத்தில் வலிமையான கயிற்றைக் கட்டியிழுத்து நிமிர்த்தி அற்புதம் செய்தவர்,
(1) கண்ணப்ப நாயனார் (2) குங்குலியக்கலய நாயனார்
(3) அப்பூதியடிகள் (4) நமிநந்தியடிகள்

32. திராவிட வேதம் என அழைக்கப்படுவது,
(1) தேவாரங்கள் (2) திருப்புகழ்
(3) நாலாயிர திவ்விய பிரபந்தம் (4) பெரிய புராணம்

33. பஞ்சபூத தலங்களில் அக்கினித் தலமாக விளங்குவது,
(1) திருக்காளத்தி (2) திருவண்ணாமலை (3) திருவாரூர் (4) சிதம்பரம்

www.ikeau.lk

34. பொலநறுவையில் கட்டப்பட்ட பத்து சிவாலயங்களில் மிகவும் சிறப்புற்று விளங்கிய 2ம் சிவாலயம்,
(1) இரவிகுல மாணிக்கஈச்சரம் (2) வானவன் மாதேவி ஈச்சரம்
(3) உத்தம சோழேச்சரம் (4) விஜய ராஜ ஈஸ்வரம்

35. குற்றமில்லாத பசுவின் சாணத்தை முறைப்படி அக்கினியால் சுட்டு அதில் வெண்ணீறான பகுதியை எடுத்து மலர்கள் இட்டு பத்திரப்படுத்தப்படும் விபூதி வகை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) கற்பம் (2) அனுகற்பம் (3) உபகற்பம் (4) அகற்பம்

36. ஆன்மாக்களுக்கு தனு கரண புவன போகம் என்பவற்றை உருவாக்குதல்,
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல் (4) மறைத்தல்

37. வாகனத் திருவிழா, ஓமம், பலி முதலியன குறிப்பது,
(1) படைத்தல் (2) காத்தல் (3) மறைத்தல் (4) அழித்தல்

- 38 – 40 வரையான வினாக்கள் அட்டவணையில் *A* இருந்து *I* வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவு செய்க.

சைவநாயன்மார்	**சமூகப் பணி**	**பதிகம்**
A. திருஞானசம்பந்தர்	D. தந்தையின் யாகத்திற்கு பொன் பெற்றமை	G.தில்லைவாழ் அந்தணர் தம்..
B. திருநாவுக்கரசர்	E. அடியார்களின் பெருமைகளையும் வரலாறுகளையும் உணர்த்தியமை.	H.பண்ணினேர் மொழியாளுமை
C.சுந்தரமூர்த்தி நாயனார்	F. வேதங்களால் மூடப்பட்ட கதவினை திறக்கப் பாடியவர்	I. இடரினும் தளரினும்…

38. ஆற்றிலிட்ட பொன்னை குளத்தில் எடுத்தமையோடு தொடர்புடைய தொகுதி,
(1) BFG (2) CFI (3) CEG (4) CEI

39. இறைவனால் சூளை கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவரோடு தொடர்புடைய தொகுதி,
(1) AFI (2) BFH (3) CFH (4) ADI

40. பூம்பாவையோடு தொடர்புடைய நாயனார்,
(1) AFG (2) ADI (3) AEH (4) ADH

(40 ×1 = 40 புள்ளிகள்)

www.ikeduk

பகுதி - II

- **முதலாம், இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**
- **முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. சைவ சிந்தாந்தம் குறிப்பிடும் இறைவனின் இரு நிலைகளும் எவை?
2. பஞ்சாங்கத்தில் இடம்பெறும் இரு திதிகளை குறிப்பிடுக.
3. நாவுக்கரசருக்கு இறைவனால் திருக்கைலாய காட்சி கொடுக்கப்பட்ட இடம் எது?
4. சைவ சமயம் வலியுறுத்தும் முக்கிய விழுமியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. சதசத்து என்பதன் பொருள் யாது?
6. தந்தையை, தாயை இழந்தவர்களால் நோக்கப்படும் விரதம் எது?
7. ''ஒரு பொருளும் காட்டாது இருளுருவங் காட்டும் இரு பொருளும் காட்டாது இது'' இதில் வரும் ''இது'' என்பது எதனைக் குறித்து நிற்கின்றது?
8. உமாபதி சிவாச்சாரியாரின் சித்தாந்த அட்டக நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
9. ஈழத்தில் நித்திய அன்னதானம் வழங்கும் ஆலயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து உள்ளது அதனைச் சென்றடையுங்கள் எனக் கூறியவர் யார்?

(10 × 2 = 20 புள்ளிகள்)

02) கீழ்வரும் பாடில்கள் இரண்டினைஅடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி, அதன் பொழிப்பினையும் தருக.

1. அங்கமும் வேதமும் ……....
2. நாமார்க்கும் குடியல்லோம் ……
3. உம்பர் தரு தேனுமணி ……..……
4. பால் நினைந்தூட்டும்……..
5. சிந்திக்கிலேன்……...

(10 புள்ளிகள்)

03) ''எளிய நல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளியின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிபணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி
தளி தொழில் செய்வது தான் தாசமார்க்கமே''– திருமந்திரம்

1. சரியை நெறியில் நிற்போர் கடைப்பிடிகும் மார்க்கத்தையும் முத்தியையும் தருக.
2. சரியை நெறியில் நின்ற மூன்று நாயன்மார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. சரியைத் தொண்டுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

04) ''தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே''

1. திருக்கேதீஸ்வரத்தின் மீது தேவாரம் பாடிய நாயன்மார்கள் யாவர்?
2. இவ் ஆலயத்தின் பண்டைய வரலாறு மூன்றினைக் குறிப்பிடுக.
3. திருக்கேதீஸ்வரத்தில் வீற்றிருக்கும் இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம், மடங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

www.lkedu.lk

05) "குன்றெ றிந்தவன் அமரர் பால் பேரருள் கொடுநோக்கி"
நன்றி யில்லவன் சிறையிடைப் பலபகல் னணுகுற்றீர்
துன்று பேரிடர் மூழ்கினீர் ஈங்கினித் துயரின்றி
எல்னும் வாழ்குதிர் துறக்க மேல் வெறுக்கையில் இருந்தென்றான்"

- கந்தபுராணம்

1. தமிழில் கந்தபுராணதத்தை இயற்றியவர் யார்? அது எத்தனை காண்டங்களாகப் வகுக்கப்பட்டுள்ளது?
2. முருகனின் பேரருள் பற்றி இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3. கந்தபுராணத்தின் மீட்சிப்படலத்திற் கூறப்பட்டிருக்கும் செய்தியினை சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 =10 புள்ளிகள்)

06) "அறிவு நெறியை வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர்"

1. புறச் சந்தான குரவர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.
2. சித்தாந்த சாஸ்திர நூல்கள் எத்தனை? அவற்றுள் அருணந்தி சிவாச்சாரியார் இயற்றிய இரண்டு நூல்களும் எவை?
3. சித்தாந்த சாஸ்திர நூல்களில் மணி முடியாக விளங்கும் சிவஞானபோதம் பற்றி சுருக்கமாக விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) கீழ்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. சைவ வாழிவில் மனித நேயம்
2. திருமூலர்
3. குங்கிலியக்கலய நாயனார்
4. மாமாங்கப் பிள்ளையார்

(2 × 5 = 10 புள்ளிகள்)

www.lkedu.lk

COVID - 19 PASEP - II

கொவிட் - 19 கால மாற்று உபாயக்கல்வி நிகழ்ச்சித்திட்டம்-II

வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை

க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான

ஆய்ந்தறிகை மதிப்பீடு – I 2020

தரம் - 11 **பாடம்: சைவநெறி** **நேரம் : 3 மணித்தியாலம்**

விடைகள்

பகுதி I

1. - (2)	11. - (1)	21. - (2)	31. - (2)
2. - (1)	12. - (3)	22. - (1)	32. - (3)
3. - (..)	13. - (2)	23. - (1)	33. - (2)
4. - (2)	14. - (2)	24. - (3)	34. - (2)
5. - (1)	15. - (2)	25. - (2)	35. - (1)
6. - (2)	16. - (4)	26. - (3)	36. - (1)
7. - (3)	17. - (1)	27. - (2)	37. - (2)
8. - (3)	18. - (3)	28. - (3)	38. - (3)
9. - (3)	19. - (2)	29. - (2)	39. - (2)
10. - (1)	20. - (3)	30. - (2)	40. - (2)

$(40 \times 1 = 40$ *புள்ளிகள்)*

பகுதி II

01) 1. சொரூப நிலை, தடத்த நிலை
2. பிரதமை, சஷ்டி, நவமி, அட்டமி, கிருத்திகை, தசமி
3. திருவையாறு
4. கடமை, வாய்மை, அன்புடமை, பிறரை மதித்தல்
5. ஆன்மா இறைவனை (சத்து) சாரும்போது இறைவனின் இயல்பையும், மலங்களை (அசத்து) சாரும்போது மலங்களின் இயல்புகளையும் பெறுவதனால் அவ் ஆன்மாவும் சதசத்து எனப்படுகின்றது.
6. தந்தை - ஆடி அமாவாசை , தாய் - சித்திராப் பௌர்ணமி
7. ஆணவ மலம்
8. திருவருட்பயன், வினாவெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது
9. செல்வச் சன்னிதி, நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்
10. ஆறுமுக நாவலர்

$(10 \times 2 = 20$ புள்ளிகள்)

02) தேவாரம் இரண்டினை எழுத்துப் பிழையின்றி எழுதி அதன் பொழிப்பினையும் எழுதுதல்.

$(3 + 3 + 2 + 2 = 10$புள்ளிகள்)

www.ikeu.lk

03) 1. திருநாவுக்கரசு நாயனார்
மார்க்கம் - தாச மார்க்கம்
முத்தி - சாலோகம்

2. சரியை நெறியில் நின்ற மூன்ற நாயன்மார்கள்
- திருநாவுக்கரசு நாயனார்
- அப்பூதியடிகள்
- திருக்குறிப்புத்தொண்ட நாயனார்
- கண்ணப்ப நாயனார்
- திருநாளைப் போவார்

3. சரியைத் தொண்டு
- சிவாலயத்தை அலகிடுதல், மெழுகுதல், கழுவுதல், பூஞ்சோலை அமைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், பூமாலை கட்டுதல், பூசைத் திரவியம் கொடுத்தல், பூசைக்குரிய பொருட்களை சுத்தம் செய்தல், விளக்கிடல், தீவத்தி, குடை, கொடி பிடித்தல், வாகனம் காவுதல்.

(10 புள்ளிகள்)

04) 1. திருஞானசம்பந்தர் சுந்தரமூர்த்தி நாயனார்

2. 1. கேது என்றும் பாம்பு வழிபட்டு முத்தியடைந்தமை.
2. சோழர்கள் இவ்வாலயத்திற்கு ராஜராஜ மகாதேவன் கோவில் என பெயரிட்டமை.
3. தொலமி தனது வரைபடத்தில் மாந்தை என்னும் துறைமுகப் பட்டணம் இருந்ததாக கூறப் படுகிறது.

3. இறைவன் - திருக்கேதீஸ்வரநாதன் , இறைவி – கௌரி அம்பாள்
தீர்த்தம் - பாலாவி , தலவிருட்சம் - வன்னி மரம்
மடங்கள் - சம்பந்தர் மடம், நாவலர் மடம், திருவாசக மடம், சிவராத்திரி மடம், கதிர்காம யாத்திரிகர் மடம்

(10 புள்ளிகள்)

05) 1. கச்சியப்ப சிவாச்சாரியார்
ஆறு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

2. கிரவுஞ்சிய மலையை அழித்த முருகப் பெருமான் தேவர்கள் மீது இரக்கம் கொண்டு நன்றியில்லாத சூரபத்மனது சிறையிலிருந்து தேவர்களை மீட்டு இனித் துன்பமின்றி சுவர்க்கத்தில் செல்வதுடன் மகிழ்ச்சியாக வாழும்படி அருளினார் என்ற பேரளுள் செய்தி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

3. கந்தபுராணத்தில் யுத்த காண்டத்தில் மீட்சிப் படலம் இடம்பெறுகின்றது.
- வீரவாகுதேவர் முருகன் கட்டளைப்படி சயந்தனையும் ஏனைய தேவர்களையும் சிறை மீட்ட செய்தி.
- சிறை மீட்ட தேவர்கள் மகிழ்ச்சிப்பெருக்கில் முருகப்பொருமானின் பாதங்களை வீழ்ந்து வணங்கி போற்றுதல்.
- இறந்த பூதகணங்களை உயிர்பெற்றெழச் செய்தல்.
- வீரமகேந்திர புரியையும் அவுணர்களின் ஏழு தீவுகளையும் முருகன் கட்டளைப்படி அழித்த செய்தி.
- முருகன் போர்க்களம் நீங்கி இலங்கையைக் கடந்து செந்தில் பதியை அடைந்த செய்தி.
- செந்திற் பகுதியில் முருகன் சிவலிங்கப் பூசை செய்தல், தேவர்கள் முருகனுக்கு பூசை செய்தல்.
- முருகன் திருவடியில் என்றும் நீங்காத அன்புபெற வேண்டுமெனத் தேவர்கள் வரம்பெறல்.

(10 புள்ளிகள்)

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

06) 1. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார்

2. நூல்கள் (14)
சிவஞானசித்தியார், இருபா இரு.்.து

3. - கி.பி. 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்டது.
- இந்நூல் சித்தாங்த சாஸ்திர நூல்களுக்கு மணிமுடியாகத் திகழ்கின்றது.
- பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என நான்கு இயல்களைக் கொண்டது.
- 12 சூத்திரங்களை உடையது.
- இந்நூலில் பதி, பசு, பாசம் பற்றி கூறப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

07) சிறுகுறிப்பு

1. சைவ வாழ்வில் மனித நேயம்
- தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், பிறரின் கஷ்டங்களுக்காக பிரார்த்தித்தல் ஆகிய நற்பண்புகள்.
- அன்பு, இனிமை, சாந்தம், அமைதி ஆகிய மனித நேயப் பண்புகளைக் கொண்டிருத்தல், சுயநலத்தை குறைத்து பொதுநலத்தை வளர்ப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுதல், வறியவர்களுக்கு உதவி செய்து, சமநோக்குடனும், சகிப்புத் தன்மையுடனும், நடந்து கொள்ளுதல், தன்னுயிர் போல் மன்னுயிர்களையும் நேசிக்கும் பண்பு.

2. திருமூலர்
- சித்தர் பரம்பரையில் முதலாவது சித்தர்
- அட்டமா சித்திகளை கைவரப் பெற்றவர்.
- திருக்கைலாய பரம்பரையினர் மாலாங்கரின் வேண்டுதலுக்கு ஏற்ப சிதம்பரத்தை அடைந்து யோகம் பயின்றது.
- மூலத்தை உணர்ந்ததனால் திருமூலரானவர்.
- பசுக்களின் துயரம் போக்க மூலரின் உடலில் புகுந்து பசுக்களை உரிய இடம் சேர்ப்பித்தவர்.
- மூவாயிரத் ஆண்டுகள் உலவில் வாழ்ந்து 3000 திருமந்திரப் பாடல்களைப் பாடியவர்.
- திருமந்திரம் 10ம் திருமுறையாக இடம்பெறுகின்றது. 9 தந்திரங்களைக் கொண்டது.

3. குங்கிலியக்கலய நாயனார்
- திருக்கடவூரில் அவதரித்த சிவ பக்தர்.
- சிவனுக்கு குங்கிலியம் இட்டு சரியைத் தொண்டு புரிந்ததினால் குங்கிலியக்கலய நாயனார் ஆவார்.
- வறுமையிலும் பொருள் பண்டங்களையும், மனைவியின் தாலியையும் விற்று குங்கிலிய தூபம் இட்டு தொண்டு செய்தவர்.
- சிவனருளால் வீட்டில் நெற்குவியலும், பொற்குவியலும் கிடைக்கப் பெற்றவர். சிவலிங்கத்தை நிமிரச் செய்தவர்.

4. மாமாங்கப் பிள்ளையார்
- இவ்வாலயம் மட்டக்களப்பு அமிர்தகழியில் அமைந்துள்ளது.
- கர்ப்பக்கிரகத்தில் விநாயகர் அங்கியுடன் சிவலிங்கம் உள்ளது.
- இவ்வாலயம் இராமாயணத்துடன் தொடர்புடையது. ஏழு தீர்த்தங்களுடன் தொடர்பு பட்டது.
- ஆலய தல விருட்சமாக குருந்த மரம் காணப்படுகிறது.

(2 ×5 =10 புள்ளிகள்)

www.ikeduk